**காரைக்குடி நகராட்சி**

**31.05.2021 ம் தேதி காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை: திரு.இரா.லெட்சுமணன், ஆணையர் மற்றும் தனிஅலுவலர்**

**மன்றப் பொருட்கள்**

| Date of meeting of the council | S.No. | Subject in the Agenda | Decision of the council |
|---|---|---|---|
| 31.05.2021 | 1 | 1. மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் சிவகங்கை அவர்களின் 04.02.2021ம் தேதிய ஒப்புதல் மற்றும் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், சிவகங்கை அவர்களின் கடித ந.க.எண்.377/2021 நாள் 03.03.2021 உத்தரவுகளின்படி தமிழ்நாடு சட்டமன்றத் பொது தேர்தல் 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ளதால் மாற்றுத்திறனாளிகள் மற்றும் 80 வயதிற்கு மேல் உள்ளவர்கள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக காரைக்குடி நகராட்சிக்கு உட்பட்ட 93 வாக்குச்சாவடி மையத்திற்கு 40 எண்ணம் மடக்கு சக்கர நாற்காலிகள் வாங்கிட உத்தரவிட்டுள்ளார்கள். மேற்படி இதற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,50,800/- (இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரத்து எண்ணூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.127/2020/சி6) | **தீர்மான எண்.1**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 2 | 2. 2021-2022ம் ஆண்டிற்கு காரைக்குடி நகராட்சியில் பயிற்சி மற்றும் அலுவலக பணி நியமித்தம் தொடர்பாக வெளியூர் செல்லும் பணியாளர்களுக்கு பிரயாணச் செலவு தொகை வழங்கிட ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1449/2020/பி2) | **தீர்மான எண்.2**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 3 | 3. இந்நகராட்சியில் கணிணி வரி வசூல் மையத்தில் உள்ள VPN CONNECTION தொலைபேசி எண்கள் 04565-232723 அலுவலக வரி வசூல் மையம் மற்றும் 04565-232724 கல்லுக்கட்டி வசூல் மையம் ஆகிய இரு வசூல் மையங்களில் 01.04.2020 முதல் 31.12.2020 வரை 9 மாதங்களுக்கு VPN நெட்வொர்க் பயன்படுத்தியமைக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.29280/2020/VB நாள் 24.03.2021ன்படி தொலைபேசி கட்டணத் தொகை ரூ.1,79,454/-ஐ செலுத்த தெரிவிக்கப்பட்டது. எனவே, அதன் பேரில் தொகை | **தீர்மான எண்.3**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | ரூ.1,79,454/-ஐ கணக்கு அலுவலர் BSNL நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. வசூல் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>(ந.க.எண்.1580/2018/பி2) | |
| | 4 | 4. இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள அனைத்து தொலைபேசி எண்களுக்கு 2021-2022ம் ஆண்டிற்கு செலுத்தப்பட வேண்டிய உத்தேச தொலைபேசி கட்டணத் தொகை ரூ.5,00,000/-க்கு (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1580/2018/பி2) | **தீர்மான எண்.4**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 5 | 5. காரைக்குடி நகராட்சி பகுதியில் உள்ள 36 வார்டுகளில் முடிதிருத்தம் செய்யு நிலையம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் வைத்து நடத்துபவர்கள் தங்களது நிறுவனங்களுக்கு காரைக்குடி நகராட்சியில் உரிமம் பெற்றுக்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிப்பை இந்நகர் பகுதி மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் 08.01.2021 அன்று தினக்குரல் செய்தித்தாள் பக்கம் எண்.5ல் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. ரூ.48,000/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.5433/2021/எச்1) | **தீர்மான எண்.5**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 6 | 6. இந்நகராட்சியில் பொறியாளராக பணிபுரிந்து 31.08.2009ல் ஓய்வுபெற்ற திரு.டி.சந்திரசேகரன் அவர்கள் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தமக்கு ஓய்வூதிய பயன்கள் காலதாமதமாக வழங்கியதற்கு வட்டி வழங்க கோரி வழக்கு தொடர்ந்தார். அதற்குண்டான காலதாமதத்திற்கு 7.5% வீதம் வட்டித் தொகை வழங்க உத்தரவிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP (MD) MD6741/2021ல் தொடரப்பட்ட வழக்கிற்கு எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கு கட்டணமாக ரூ.7500/-ஐ நகராட்சி வழக்கறிஞர் மதுரை திரு.பி.மகேந்திரன் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மன்ற முன் அனுமதியை எதிர்நோக்கி தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.5886/2014/சி4) | **தீர்மான எண்.6**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 7 | 7. இந்நகராட்சி வார்டு எண்.1 கழனிவாசல் இடைச்சி அம்மன் கோவில் ஆழ்குழாய் கிணறு 15 எச்.பி நீர்மூழ்கி மின் மோட்டார் மற்றும் பம்ப் பழுது நீக்கம் பணிக்கு அங்கீகாரம் பெற்ற TEXMO INDUSTRIES MADURAI SERVICE DIVISION, | **தீர்மான எண்.7**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td>மதுரை நிறுவனத்திடமிருந்து ரூ.34737/-க்கு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளவும், அதன்படி TEXMO INDUSTRIES MADURAI SERVICE DIVISION, மதுரை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>8</td><td>. இந்நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறு எண்.5ல் உள்ள 15 எச்.பி நீர்மூழ்கி மின் மோட்டார் மற்றும் பம்ப் பழுது நீக்கம் பணிக்கு அங்கீகாரம் பெற்ற DECCAN INDUSTRIES, கோவை நிறுவனத்திடமிருந்து ரூ.27267/-க்கு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது. மேற்படி விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளவும், அதன்படி DECCAN INDUSTRIES, கோவை நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கிடவும் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண்.8<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>9</td><td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண்.TN63 T3333க்கு வாகன காப்பீடு 23.05.2021ல் முடிவடைவதால் அதனை புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு தொகை ரூ.11628/-ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.</td><td>தீர்மான எண்.9<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>10</td><td>இந்நகராட்சியில் 2019-2020ம் ஆண்டுக்கான தணிக்கை நடைபெற்று முடிவு பெற்று உள்ளது. தணிக்கை புத்தகம் ஐந்து பிரதிகள் ஜெராக்ஸ் எடுத்தமைக்கும் அந்த ஐந்து புத்தகங்களையும் பைண்டிங் செய்து உள்ளாட்சி நிதி தணிக்கை, சிவகங்கை அவர்களிடம் ஒப்படைப்பு செய்தமைக்கும் திரு.ஆ.சரவணன், இளநிலை உதவியாளர் அவர்களால் செலவிடப்பட்ட செலவு தொகை ரூ.30,000/-யை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.9457/2017/அ3)</td><td>தீர்மான எண்.10<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>11</td><td>11. காரைக்குடி நகராட்சியில் மத்திய, மாநில அரசு நிதியின் கீழ் பல்வேறு திட்டப்பணிகள் அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பணிகள் நடைபெற்று வருகின்றன.<table><tr><td>வ.</td><td>திட்டத்தின் பெயர்</td><td>பணியின் விபரம்</td><td>மதிப்பீடு</td></tr></table></td><td>தீர்மான எண்.11<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td>எண்</td><td></td><td></td><td></td></tr>
<tr><td>1</td><td>Capital Grant Fund / 2019/20 (Sanitary Quarters)</td><td>துப்புரவு பணியாளர்கள் குடியிருப்பு</td><td>300.00</td></tr>
<tr><td>2</td><td>Micro Compost Centre</td><td>மக்கும் குப்பைகளை உரமாக்குதல்</td><td>325.00</td></tr>
<tr><td>3</td><td>Bio-Mining</td><td>நுண்ணுயிர் மையம்</td><td>737.00</td></tr>
<tr><td>4</td><td>Special Road Programme 2020-21</td><td>சாலைப்பணிகள்</td><td>3125.00</td></tr>
</table>
மேற்கண்ட திட்டப்பணிகளை தவிர்த்து பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், நீர்நிலைகள் மேம்பாடு பணிகள் மற்றும் பாதாள சாக்கடை திட்டப்பணியினால் சேதமடைந்துள்ள சாலைகளை சீரமைத்து புதுப்பித்தல் போன்ற பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு வழங்கிட கோரி அரசுக்கு கருத்துருக்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br>
மேற்கண்டவாறு நடைபெறும் திட்டப்பணிகளை கண்காணித்திடவும் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து அவ்வப்போது உயர் அலுவலர்களால் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டத்திற்கு அறிக்கைகள் சமர்ப்பித்தல், புகைப்படங்கள் எடுத்து அதில் பணியின் பெயர் தட்டச்சு செய்து அனுப்புதல் மற்றும் அவ்வப்போது கோரப்படும் திட்டப்பணிகளுக்கு கருத்துருக்கள் தயார் செய்தல் போன்ற பணிகளை செய்திட உதவிப் பொறியாளர் ஒருவர் மட்டும் உள்ளதால் அவருக்கு உதவியாக கணிணி தட்டச்சு மற்றும் Autocad தெரிந்த ஒரு நபரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகை அடிப்படையில் Outsourcing முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும்அதற்கா ,க நாட்களுக்கு 85 (மே–2021, ஜீன்–2021 மற்றும் ஜீலை–2021 ( உத்தேச செலவுத் தொகை ரூ.40,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
பொதுநிதியின் கீழ் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>12</td>
<td>காரைக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் குப்பை அள்ளும் வாகனம் TN25 AQ 8404க்கு புதிய பேட்டரி வாங்குவதற்கு தொகை ரூ.10000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u><br>
1. அனுமதிக்கலாம்<br>
2. பொது சுகாதாரம் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.1674/2021/எச்1)</td>
<td>தீர்மான எண்.12<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>13</td>
<td>13. காரைக்குடி நகராட்சியில் கடந்த 2013ம் ஆண்டில் நவீன எரிவாயு தகனமேடை அமைக்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவ்வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த 100 அடி உயரம் கொண்ட இரும்பு புகைபோக்கி (CHIMNEY) முழுவதுமாக அரிக்கப்பட்ட நிலையில் கடந்த 17.04.2021ல் தரையிலிருந்து சுமார் 10 அடி உயரத்தில் முறிந்து கீழே விழுந்துவிட்டது. தற்போது 10 அடி உயரத்தில் புகை வெறியேறும் நிலை உள்ளதால் சுற்றுப்புற சூழல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பழுதடைந்து சேதமடைந்த மேற்படி புகை போக்கினை மாற்றி 100 அடி உயரம் கொண்ட (அதற்கான அளவுகள் மற்றும் தரத்துடன் கூடிய) புதிய</td>
<td>தீர்மான எண்.13<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | புகைபோக்கி நிறுவிடவும் மற்றும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.7.25 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u><br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். பணியின் அவசர அவசியத்தைக் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று நடவடிக்கைகள் மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம். | |
| | **14** | 14.இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் ஈப்பு வாகன எண்.TN63 T5823க்கு வாகன காப்பீடு 23.05.2021ல் முடிவடைவதால் அதனை புதுப்பிக்க யுனைடெட் இந்தியா இன்ஸ்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட் நிறுவனத்திற்கு தொகை ரூ.14359/-ஐ செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண்.14<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **15** | 15. இந்நகராட்சிக்கு கொரனா 2வது அலை தடுப்பு நிவாரண நிதியாக ரூ.50.00 இலட்சம் GONo.369 REVENUE AND DISASTER MANAGEMENT DEPARTMENT, DATED 06.05.2021 மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கொரனா தடுப்பு பணிக்கான அனைத்து செலவினங்களுக்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று கொரனா தடுப்பு பணிக்காக செலவினம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.15<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |
| | **16** | 16. காரைக்குடி நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான கீழ்கண்டுள்ள வாகனங்கள் பயன்பாட்டில் உள்ளன.<br>**1.** பேட்டரி வாகனங்கள் (BOV) – 54<br>**2.** இலகுரக வாகனங்கள் (LCV) – 10<br>**3.** காம்பேக்டர் வாகனங்கள் – 2<br>**4.** டிப்பர் லாரி – 3<br>**5.** ஜெட் ராடிங வாகனம் – 1<br>**6.** JCB – 1<br>——<br>**71**<br>——<br>மேற்கண்டுள்ள 71 வாகனங்களின் தினசரி பயன்பாட்டினை கண்காணித்திட அனைத்து வாகனங்களிலும்ம GPS Tracking System அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன்பேரில், மாதாந்திர வாடகை அடிப்படையில் வாகனங்களில் GPS Tracking System அமைத்திடவும் மற்றும் அதற்கான ஓர் ஆண்டு உத்தேச | **தீர்மான எண்.16<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | செலவுத் தொகை ரூ.14.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:**<br>பொது நிதியின் கீழ் அனுமதிக்கலாம். **தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.** | |
| **17** | | 17. **காரைக்குடி நகராட்சியில் "சம்பையூற்று" கரையில் அமைக்கப்பட்டுள்ள 13 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நகரில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 24 ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 12.03 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 112 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரின் (SODIUM HYPO CHLORIDE) மூலம் குளோரினேசன் செய்யப்படுகிறது. ஒரு இலட்சம் லிட்டருக்கு 2 ½ லிட்டர் வீதம் திரவ குளோரின் சேர்த்து வழங்கும் பட்சத்தில், குடிநீர் விநியோகத்தின் கடைசி பகுதியில் (TAIL END) 0.50-1.00 PPM குளோரின் அளவு கிடைக்கும். இவ்வாறு தினசரி விநியோகம் செய்யப்படும் 12.03 MLD குடிநீருக்கு சுமார் 310 லிட்டர் திரவகுளோரின் தேவைப்படுகிறது. அதன்படி 6 மாத காலத்திற்கு தேவைப்படும் (ஜீன் 2021 முதல் நவம்பர் 2021 வரை) திரவ குளோரின் வாங்குவதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.**<br>**அலுவலகக்குறிப்பு:**<br>குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம். **பணியின் அவசர அவசியத்தைக் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் அனுமதிக்கலாம்.** | **தீர்மான எண்.17**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **18** | | 18. காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான சுப்பிரமணியபுரம் பகுதி கடை எண்.3ஜ வாடகை நிலுவை காரணமாக நகராட்சியால் பூட்டி சீல் வைக்கப்பட்டது. மேற்படி கடையை பொது ஏலத்தில் விடப்பட்டு திரு.வி.முத்துசாமி என்பவருக்கு ஒப்படைக்க வேண்டிய சூழ்நிலையில், 19.03.2021 அன்று காவல்துறை, வருவாய் துறை ஒத்துழைப்புடன் இந்நகராட்சி அலுவலர்கள் முன்னிலையில் கடை திறக்கப்பட்டது. மேற்படி நிகழ்வினை வீடியோ கவரேஜ் திரு.ஜி.சங்கர், உதயம் போட்டோஸ், காரைக்குடி என்பவர் செய்துள்ளார். அதற்கான பட்டியல் ரூ.4000/-க்கு வழங்கியுள்ளார். எனவே மேற்படி தொகையை திரு.ஜி.சங்கர் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4657/2018/அ1) | **தீர்மான எண்.18**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **19** | | 19. இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கான பயன்பாட்டில் உள்ள கீழ்கண்டுள்ள **6** வாகனங்களின் தகுதிகாண் பருவ காலம் (FC) முடிவடைந்துவிட்டதால் வாகனங்களில் உள்ள பழுதுகளை சரிசெய்து புதுப்பித்து மீண்டும் FC பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.**3.00** இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. TN63 T 2417 - டிப்பர் லாரி<br>2. TN63 BY 5323 - TATA ACE | **தீர்மான எண்.19**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | | 3. TN63 BY 5314 - TATA ACE<br>4. TN63 BX 2021 - TATA ACE<br>5. TN63 BX 2045 - TATA ACE<br>6. TN63 BX 2072 - TATA ACE<br>**அலுவலகக்குறிப்பு:**<br>**1)** அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.688/2020/எச்1)** | |
| | **20** | 20. இந்நகராட்சிக்கு சொந்தமான அம்மா உணவகத்தில் பயன்படுத்தப்பட்ட கேஸ் அடுப்பு வால்வு பழுதடைந்துவிட்டதால் மேற்படி கேஸ் அடுப்பு வால்வு பழுது நீக்கம் செய்யப்பட்ட வகையில் செலவினம் ரூ.1200/- அம்மா உணவகம் பராமரிப்பு யோகம் மகளிர் சுய உதவிக் குழுவிற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மன்ற அனுமதி எதிர்நோக்கி பணி செய்யப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.6529/2019/அ3) | **தீர்மான எண்.20**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **21** | 21. காரைக்குடி நகராட்சி சர்வே வார்டு எண்.02, பிளாக் எண்.24 நகரளவை எண்.624/1, பழைய நகரளவை எண்.509 பாகம், சுப்பிரமணியபுரம் முதல் தெற்கில் 2118.50 சதுரமீட்டர் பரப்பளவு இடத்தில் வணிக உபயோகம் (AUTOMOBILE SHOW ROOM) கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி கோரி திரு.எ.ராமநாதன் என்ற ஏ.ஆர்.ராமசாமி என்பவர் வரைபடம் மற்றும் ஆவணங்களுடன் விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார். மேற்கண்ட இடத்திற்கு “ABCD” என எல்லையிட்டு மனையிட ஒப்புதலும் அம்மனையில் தரைத்தளம் 746.48 சதுரமீட்டர் பரப்பளவு கொண்ட உத்தேச வணிகக் கட்டிடம் (AUTOMOBILE SHOW ROOM) கட்டிடத்திற்கு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சிவகங்கை அவர்களின் கடித ந.க.எண்.1223/2021/சிமா2 நாள் 29.04.2021ல் க.வ/ந.ஊ.து.இ (சிமா) எண்.04/2021 என எண்ணிட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கூறிய உத்தேச வரைபடத்திற்கு இறுதி ஒப்புதல் வழங்க உள்ளூர் திட்ட குழுமம் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>இறுதி ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.1837/2021/எப்2) | **தீர்மான எண்.21**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| | **22** | 22. இந்நகராட்சியின் அனைத்து பிரிவுகளிலும் உள்ள லேசர் பிரிண்டர்களின் கேட்ரேஜ் பலமுறை ரீபில் செய்து தேய்மானம் ஏற்பட்டு உபயோகப்படுத்த இயலவில்லை. எனவே, புதிய கேட்ரேஜ் (லேசர் பிரிண்டர், டாட்மேட்ரிக் பிரிண்டர் மற்றும் ஜெராக்ஸ் மிஷின்) கீழ்க்கண்ட விபரப்படி வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,20,000/- ஆகும். எனவே, இப்பட்டியலில் உள்ள கேட்ரேஜ்களை வாங்கி வழங்குவதற்கு மன்றத்தின் | **தீர்மான எண்.22**<br>**அலுவலக குறிப்பு**<br>**அனுமதிக்கப்பட்டது** |

அனுமதி வேண்டப்படுகிறது.

| SNO | MODEL | NOS |
|---|---|---|
| 1 | 12A | 10 |
| 2 | 35A | 10 |
| 3 | SAMSUNG | 5 |
| 4 | EPSON 300 | 10 |
| 5 | EPSON 310 | 5 |
| 6 | TVS | 5 |
| 7 | CANON | 10 |
| 8 | 88A | 10 |
| 9 | KONICA XEROX MACHINE | 5 |

அலுவலகக்குறிப்பு:

பொது நிதியின் கீழ் மன்றம் அனுமதிக்கலாம்.

**23**

23. அரசாணை நிலை எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (ME4) நாள் 03.07.2007ன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான கடைகளை 9 வருட காலத்திற்கு 3 தொகுப்புகளாக குத்தகைக்கு விட திருத்திய நடைமுறை ஆணைகள் வெளியிடப்பட்டது. அதன் அடிப்படையில் வ.எண்.1 மற்றும் 2 குத்தகை கடைகளுக்கு, மேலும் 9 ஆண்டுகளுக்கு குத்தகை காலம் நீட்டிப்பு செய்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் உத்தரவின்படியும் இந்நகர்மன்ற தீர்மான எண்.127 நாள் 31.08.2020ன்படி (01.09.2018 முதல் 31.08.2021 முடிய) மறு மதிப்பீடு செய்து வாடகை உயர்வு செய்து உரிமம் நீட்டிக்கப்பட்டது. அதன்பேரில் நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்டவாறு வ.எண்.3 முதல் 7 வரை உள்ள கடைகள் இரண்டாவது முறை மூன்றாண்டு குத்தகை காலம் நீட்டிப்பு செய்திடவும், வ.எண்.1 முதல் 7 வரை உள்ள கடைகளுக்கு தற்போதைய வாடகையில் இருந்து 15 சதவீதம் உயர்வு செய்து வாடகை நிர்ணயம் செய்யவும், கணிணியில் கேட்பு எழுப்பிடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | குத்தகைதாரர் பெயர் (திருவாளர்கள்) | கடையின் விபரம் | வரி விதிப்பு எண் | தற் போதைய வாடகை ரூ. | 15% உயர்வு செய்யப் பட்ட வாடகை | உரிமம் புதுப்பிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | நூர்முகமது | கல்லுக்கட்டி வடக்கு | 111/242 | 4107 | 4107+616= 4723 | 01.09.2021 முதல் 31.08.2024 |
| 2 | நூர்முகமது | இராஜாஜி பேருந்து | 111/243 | 1026 | 1026+15 | 01.09.2021 |

**தீர்மான எண்.23**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிலையம் பழைய ஆனந்த் ஹோட்டல் கடை எண்.6 | | | 4= 1180 | முதல் 31.08.2024 |
| 3 | எம்.ராஜா | இராஜாஜி பேருந்து நிலையம் | 111/285 | 8816 | 8816+1322 =10138 | 01.09.2021 முதல் 31.08.2024 |
| 4. | டி.பாண்டி | கல்லுக்கட்டி கிழக்கு | 111/BD01/00005 | 4772 | 4772+716= 5488 | 01.10.2021 முதல் 30.09.2024 |
| 5 | ஜி.விமல் | கல்லுக்கட்டி மேற்கு கடை எண்.8 | 111/BD01/00037 | 11000 | 11000+1650= 12650 | 01.12.2021 முதல் 30.11.2024 |
| 6 | ஆவின் பூத் | செஞ்சை, சி.எம்.சி ரோடு | 111/LD02/00018 | 1001 | 1001+150= 1151 | 01.11.2021 முதல் 31.10.2024 |
| 7 | ஆவின் பூத் | புதிய பேருந்து நிலையம் | 111/LD02/00018 | 1751 | 1751+263= 2014 | 01.04.2021 முதல் 31.03.2024 |

அலுவலகக்குறிப்பு:

அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2017/2021/அ1)

**24**

24. காரைக்குடியில் சூரக்குடி சாலையில் உள்ள அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் இரும்பு ஆங்கில் மற்றும் தகடுகளை கொண்டு நாள் வாடகை அடிப்படையில் தற்காலிக நிழல்பந்தல் அமைக்கும் பணியினை செய்வதற்கு இந்நகரில் உள்ள உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டுள்ள மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| | நாள் ஒன்றுக்கு |
|---|---|
| 1. TRS EVENTS, காரைக்குடி | - ரூ.2500/- |
| 2. MRS ஆடியோ மற்றும் லைட் சிஸ்டம்ஸ் மேரேஜ் டெக்கரேட்டர்ஸ், காரைக்குடி | - ரூ.2800/- |
| 3. வேணி பவர் ஹவுஸ் ஆடியோஸ் மற்றும் லைட் ஹவுஸ், புதுவயல் | - ரூ.3000/- |

மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள TRS EVENTS, காரைக்குடி

**தீர்மான எண்.24**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | | |
|---|---|---|---|
| | | அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளவும், ஒரு மாதத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.77,500/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>கொரனா நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | |
| | 25 | 25. காரைக்குடி இரயில்வே பீடர் சாலையில் உள்ள அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் இரும்பு ஆங்கில் மற்றும் தகடுகளை கொண்டு நாள் வாடகை அடிப்படையில் தற்காலிக நிழல்பந்தல் அமைக்கும் பணியினை செய்வதற்கு இந்நகரில் உள்ள உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டுள்ள மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>நாள் ஒன்றுக்கு<br>1. TRS EVENTS, காரைக்குடி - ரூ.2500/-<br>2. MRS ஆடியோ மற்றும் லைட் சிஸ்டம்ஸ் மேரேஜ் டெக்கரேட்டர்ஸ், காரைக்குடி - ரூ.2800/-<br>3. வேணி பவர் ஹவுஸ் ஆடியோஸ் மற்றும் லைட் ஹவுஸ், புதுவயல் - ரூ.3000/-<br>மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள TRS EVENTS, காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளவும், ஒரு மாதத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.77,500/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>கொரனா நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண்.25**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| | 26 | 26. காரைக்குடி சூரக்குடி சாலையில் உள்ள அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் இரும்பு கம்பிகள் ஊன்றி 32 எண்ணம் 200 W LED விளக்குகள் நாள் வாடகை அடிப்படையில் தற்காலிக தெருவிளக்குகள் அமைக்கும் பணியினை செய்வதற்கு இந்நகரில் உள்ள உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து நேரிடையாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில், கீழ்க்கண்டுள்ள மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.<br>நாள் ஒன்றுக்கு<br>1. எஸ்.ஆறுமுகம், MRS ஆடியோ மற்றும் லைட் சிஸ்டம்ஸ் மேரேஜ் டெக்கரேட்டர்ஸ், காரைக்குடி - ரூ.190/-<br>2. வேணி பவர் ஹவுஸ் ஆடியோஸ் மற்றும் லைட் ஹவுஸ், புதுவயல் - ரூ.220/-<br>3. சண்முகம் DTS கோட்டையூர் - ரூ.260/-<br>மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள எஸ்.ஆறுமுகம், MRS ஆடியோ மற்றும் லைட் சிஸ்டம்ஸ் மேரேஜ் டெக்கரேட்டர்ஸ், காரைக்குடி அவர்களின் விலைப்புள்ளியை ஒப்புக்கொள்ளவும், ஒரு மாதத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.188480/-க்கும் மன்றத்தின் அனுமதி | **தீர்மான எண்.26**<br>**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td></td><td>வேண்டபடுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>கொரனா நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>27</td><td>இந்நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள 1 NOS டிப்பர் லாரி, 5 NOS டாட்டா ஏ.சி வாகனங்களில் உள்ள பழுதுகளை சரி செய்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/S பிரபுக்குமார் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 1.97% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>M/S பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட 0.32% குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S பாலமுருகன் ஆட்டோ சர்வீஸ், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.32% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.27<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>28</td><td>28. இந்நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்பாட்டில் உள்ள 71 NOS வாகனங்களையும் கண்காணித்திட GPS TRACKING SYSTEM பொருத்துதல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/S GLOBAL TECH, NO15, BV NAGAR, NANGANALLUR, CHENNAI</td><td>மதிப்பீட்டை விட 1.97% அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>M/S SOFTBERY SOLUTION, KARAIKUDI</td><td>மதிப்பீட்டை விட 0.28% குறைவு</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S SOFTBERY SOLUTION, KARAIKUDI அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.28% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.28<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>29</td><td>29. இந்நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் ரூ.7.25 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் நவீன எரிவாயு தகன மேடைக்கு புதியதாக புகைபோக்கி (CHIMNEY) வாங்கி பொருத்தும் பணிக்கு நகர்மன்றம் அனுமதி</td><td>தீர்மான எண்.29<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>அளித்ததின் பேரில் 21.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>M/S.SGS SERVICES, CHENNAI</td><td>மதிப்பீட்டை விட 0.12% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S.LOGESWARI INDUSTRIES, CHENNAI</td><td>மதிப்பீட்டை விட 1.30% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S.SGS SERVICES, CHENNAI அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.12% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td></td><td>30</td><td>30. இந்நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் சாத்தப்பா பூங்கா வளாகத்தில் உள்ள ஆணையாளர் குடியிருப்பில் மராமத்து பணிகள் செய்து வர்ணம் பூசி புதுப்பித்தல் பணி செய்வதற்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 25.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.28% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.69% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.28% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.</td><td>தீர்மான எண்.30<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>31</td><td>31. இந்நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் வார்டு எண்.2 கழனிவாசல் பாரதிதாசன் தெருவில் சிமெண்ட் RCC குழாய் கொண்ட வடிகால் அமைத்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 25.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு</td><td>தீர்மான எண்.31<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.33% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.92% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.செந்தில்குமார், ஒப்பந்ததாரர், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.33% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td><td></td></tr>
<tr><td></td><td>32</td><td>
32. இந்நகராட்சி கல்வி நிதி 2021-22ன் கீழ் ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் ஆலங்குடியார் துவக்கப்பள்ளி வளாகத்தின் முகப்பு பகுதியில் பேவர் பிளாக் தளம் அமைத்தல் மற்றும் பெஞ்சு மற்றும் டெஸ்க்களுக்கு பெயிண்ட் அடித்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 27.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.36% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 2.17% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.36% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td><td>தீர்மான எண்.32<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td></td><td>33</td><td>
33. இந்நகராட்சி குடிநீர் நிதி 2021-22ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் உள்ள அனைத்து ஆழ்குழாய் கிணறுகளுக்கும் திரவ குளோரினேஷன் (SODIUM HYPO CHLORIDE) ஜீன் 2021 முதல் நவம்பர் 2021 வரை சப்ளை செய்தல் பணிக்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 28.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>M/S.SRI RAJA GANAPATHY ENGINEERING WORKS, AVADI,</td><td>மதிப்பீட்டை விட 0.31%</td></tr>
</table>
</td><td>தீர்மான எண்.33<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td>CHENNAI</td><td>குறைவு</td></tr>
<tr><td>2</td><td>M/S SRI SABARI ENGINEERING WORKS, CHENNAI</td><td>மதிப்பீட்டை விட 1.89% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S SRI RAJA GANAPATHY ENGINEERING WORKS, AVADI, CHENNAI அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.31% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td></td>
<td>34</td>
<td>
34.இந்நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் ரூ.2.40 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் வார்டு எண்.34 வைத்தியலிங்கபுரம் பகுதியில் கட்டப்பட்டுள்ள பொது விநியோக அங்காடி கட்டிடத்தில் கூடுதல் பணிகள் செய்வதற்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 27.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.39% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.69% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.39% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு:<br>
அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண்.34<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td></td>
<td>35</td>
<td>
35.இந்நகராட்சி வருவாய் நிதி 2021-22ன் கீழ் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் (ICDS) கீழ் 4 எண்ணிக்கை அங்கன்வாடி மையங்களை பராமரிப்பு பணிகள் மேற்கொண்டதில் கூடுதல் பணிகளை செய்வதற்கு நகர்மன்றம் அனுமதி அளித்ததின் பேரில் 27.05.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு குறைவு
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்த சதவீதம்</td></tr>
<tr><td>1</td><td>திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 0.33% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், காரைக்குடி.</td><td>மதிப்பீட்டை விட 1.92% அதிகம்</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்.35<br>அலுவலக குறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திருமதி.பி.வசந்தா, ஒப்பந்ததாரர், காரைக்குடி அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.33% குறைவாக உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>அனுமதிக்கலாம். | |
| | **36** | 36. வருகிற 06.04.2021 அன்று 2021 சட்டமன்ற தேர்தல் நடைபெறும் என தேர்தல் ஆணையத்தால் 26.02.2021 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதனை தொடர்ந்து இந்நகரில் உள்ள வாக்குச்சாவடி மையங்களிலும் செய்யப்பட வேண்டிய கீழ்க்கண்டுள்ள பணிகளுக்கான விலைப்புள்ளிகள் நேரிடையாக பெறப்பட்டுள்ளன. அதன் விபரம் பின்வருமாறு. | **தீர்மான எண்.36 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

1. வாக்குச்சாவடி மையங்களில் தடுப்புகள் மற்றும் சாய்தளம் அமைத்தல்:

| பணியின் விபரம் | அளவு | வெங்கடேஸ்வரா சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | அன்னை சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | RCM சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி |
|---|---|---|---|---|
| தடுப்புகள் அமைத்தல் | 1 ச.அடி | 30.00 | 40.00 | 45.00 |
| சாய்தளம் அமைத்தல் | 1 மையத்திற்கு | 1500.00 | 1600.00 | 1700.00 |

2. சாமியானா பந்தல் அமைத்தல்:

| பணியின் விபரம் | அளவு | வெங்கடேஸ்வரா சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | அன்னை சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | RCM சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி |
|---|---|---|---|---|
| 20’ x 15’ அளவில் சாமியானா பந்தல் | 1 எண்ணம் | 2100.00 | 1900.00 | 2500.00 |

3. வாடகை அடிப்படையில் மின்சாதனங்கள் அமைத்தல்:

| பணியின் விபரம் | அளவு | வெங்கடேஸ்வரா சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | அன்னை சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | RCM சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி |
|---|---|---|---|---|
| 40 Wடியூப் லைட் | 1 எண்ணம் | 50.00 | 60.00 | 65.00 |
| 40 Wஹாலோஜன் லைட் | 1 எண்ணம் | 300.00 | 325.00 | 350.00 |
| 48” சீலிங் பேன் | 1 எண்ணம் | 300.00 | 320.00 | 350.00 |
| 3 பின் பிளக் | 1 எண்ணம் | 150.00 | 175.00 | 200.00 |

4. நகராட்சி பள்ளிகளில் நிரந்தரமாக புதிய டியூப்லைட் மற்றும் 48” மின்விசிறி அமைத்தல்:

| பணியின் விபரம் | அளவு | வெங்கடேஸ்வரா சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | அன்னை சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி | PCM சென்டிரிங் ஒர்க்ஸ், காரைக்குடி |
|---|---|---|---|---|
| 3 பின் பிளக் | 1 எண்ணம் | 1900.00 | 2000.00 | 2150.00 |
| 40 W டியூப் லைட் அசம்பிளி | 1 எண்ணம் | 590.00 | 640.00 | 700.00 |
| பிளாஸ்டிக் குடம் மற்றும் மூடி | 1 எண்ணம் | 140.00 | 155.00 | 170.00 |
| 20 லிட்டர் குடிநீர் கேன் | 1 எண்ணம் | 40.00 | 50.00 | 60.00 |

பட்டியலில் கண்டுள்ளவாறு 5 இனங்களுக்கும் வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளிகளை ஒப்புக் கொள்ளவும், அதன் அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. குறைந்த விலைப்புள்ளிகளை ஒப்புக்கொள்ள அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியத்தைக் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

**37**

37. இந்நகராட்சி செக்காலை உயர்மட்ட மேல்நிலை தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் உள்ள 15 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் இயங்கவில்லை. மோட்டாரை MEGER TESTING-ல் TEST செய்து பார்த்ததில் MOTOR COIL WINDING பழுதடைந்து உள்ளதாலும், மேலும் பழைய மோட்டார் என்பதாலும் மோட்டார் வாங்கப்பட்டு 15 ஆண்டுகள் ஆனதால் அதனை சரிசெய்து மீண்டும் பயன்படுத்த இயலாது என்பதால், மேற்கண்ட மோட்டாருக்கு பதிலாக புதிதாக 10 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.78,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:

1. குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.37**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

**38**

38. இந்நகராட்சி அலுவலக எதிரில் உள்ள நகராட்சி பூங்காவில் அமைந்துள்ள ஆழ்குழாய் கிணறு மின்மோட்டார் பம்ப் 15 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் இயங்கவில்லை. மோட்டாரை MEGER TESTING-ல் TEST செய்து பார்த்ததில் MOTOR COIL WINDING பழுதடைந்து உள்ளதாலும், மேலும் பழைய மோட்டார் என்பதாலும் மோட்டார் வாங்கப்பட்டு 15 ஆண்டுகள் ஆனதால் அதனை சரிசெய்து மீண்டும் பயன்படுத்த இயலாது என்பதால், மேற்கண்ட மோட்டாருக்கு பதிலாக புதிதாக 5 எச்.பி நீர்மூழ்கி மின்மோட்டார் வாங்கிட ஆகும்

**தீர்மான எண்.38**
**அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது**

| | | | |
|---|---|---|---|
| | | உத்தேச செலவினம் ரூ.73,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1. குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம் | |
| | **39** | 39. காரைக்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதி சர்வே வார்டு எண்.02, பிளாக் எண்.44, நகரளவு எண்.904/5, ஊத்துப்பிள்ளையார் கோவில் தெருவில் வசிக்கும் திரு.அ.ஜென்னத்பேகம் க/பெ.மு.அய்யூப்கான் என்பவர் சாலையை ஆக்கிரமித்து பழைய வீட்டை இடித்து புதியதாக தார்சு வீடு கட்ட தொடங்கியுள்ளதாகும் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றி பொதுமக்கள் வாகன பயன்பாட்டிற்கும் மேற்படி ஆக்கிரமிப்பை அகற்றி பொதுமக்கள் வாகன பயன்பாட்டிற்கும் மக்கள் பயன்பாட்டிற்கும் சாலையை மீட்டு தருமாறு திரு.ஆர்.ராமமூர்த்தி என்பவர் காரைக்குடி நகராட்சி ஆணையரை 2ம் பிரதிவாதியாக சேர்த்து சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண்.WP(MD)NO18975/2020 தொடர்ந்துள்ளார் மேற்கண்ட வழக்கு தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை வழக்கு எண். WP(MD)NO18975/2020 மற்றும் WMP NO15893/2020 22.01.2021 அன்று தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட வழக்கில் நகராட்சி சார்பாக ஆஜராகிய வழக்கறிஞர் திரு.பி.மகேந்திரன் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் ரூ.7500/-ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.18975/2020/எப்1) | **தீர்மான எண்.39 அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

தனி அலுவலர்
காரைக்குடி நகராட்சி